# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.07.2026 | தீபம் 44


# பாரம்பரிய மரபு குன்றாது இம்முறையும் கலாசாலையில் திருவாசகவிழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமன்றம் முன்னெடுத்த திருவாசகவிழா 19.06.2026 (வெள்ளிக் கிழமை) காலை 8.30 மணி முதல் காலை 10.00 மணி வரை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவப்புலவர் கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் (ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை) அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

முதல் நிகழ்வாக கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரப் பெருமானுக்கு விசேடபூஜை நடை பெற்று அங்கிருந்து திருவாசக பாராயணத்துடன் மணிவாசக சுவாமிகளின் திருவுருவப்படம் நிகழ்வு நடைபெற்ற ரதிலஷ்மி மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்பட்டது.

மண்டப நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின நிகழ்வுகளை ஆங்கில கல்விநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் தொகுத்து வழங்கினார்

ஆசிரிய மாணவர் உரையினை விசேட கல்விநெறி ஆசிரிய மாணவன் தங்கராசா தர்சன் மணிவாசகம் என்ற பொருளில வழங்கினார்.


தொடர்ந்து திருவாசகமும் மணிவாசகரும் என்ற பொருளி லமைந்த காணொளி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோ ஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சைவப்புலவர் கலாநிதி ஏ.அனுசாந்தன் சைவத்தின் ஆணிவேர் திருவாசகம் என்ற பொருளில உரை ஆற்றினார்.

➡ தொடர்ச்சி 18 ஆம் பக்கம்









01.04.2026 — 30.06.2026 காலாண்டு நிகழ்வுகளின் தொகுப்பு

# கலாதீபக் குழுமம்


**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

**இதழ் வடிவமைப்பு**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்பட மாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் மகோற்சவ நிகழ்வு

இருபாலை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தில் 29.05.2026 வெள்ளிக்கிழமை (03 ஆம் திருவிழா) காலைத் திருவிழா கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்டது

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் மகோற்சவத்தை மிகவும் பக்திபூர்வமாக நடாத்தி வைத்தார்.





## புதிய பிரதி அதிபராக பொன்னுத்துரை சற்குணநாதன் கடமையேற்றார்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர்களுள் ஒருவராக பொன்னுத்துரை சற்குணநாதன் 18. 06.2026 வியாழன் முதல் செயற்படுகிறார். இலங்கை கல்வியியலாளர் சேவையின் வகுப்பு 1 சிரேஷ்ட உத்தியோகத்தராகிய அவருக்கு கலாசாலை சமூகத்தின் சார்பில் நல்வாழ்த்துகள்.



# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**விழுமியக் கல்வி: எதிர்காலச் சமுதாயத்தின் அச்சாணி**

இன்றைய நவீன உலகம் தொழில்நுட்ப ரீதியா-கவும், அறிவியல் ரீதியாகவும் அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. ஆனால், இந்த அறிவுசார் வளர்ச்சிக்கு இணையாக மனிதர்களிடம் ஒழுக் கமும், ஆன்மீக மற்றும் சமூக விழுமியங்களும் வளர்கிறதா என்பது கேள்விக்குறியே. வெறும் மதிப்பெண்களையும், வேலைவாய்ப்புகளையும் மட் டுமே இலக்காகக் கொண்ட தற்போதைய கல்வி முறை, ஒரு சிறந்த மனிதனை உருவாக்குவதில் முழுமை அடைவதில்லை. இங்குதான் " விழுமியக் கல்வி" (Value Education) என்பதன் தேவை இன்றியமையாததாகிறது.

விழுமியம் என்பது அன்பு, கருணை, நேர்மை, பிறரை மதித்தல், சகிப்புத்தன்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு போன்ற நற்பண்புகளின் தொகுப் பாகும். கல்வியறிவு பெற்ற ஒருவர் சிறந்த பண்பா ளராக இல்லாதபோது, அவரது அறிவினால் சமூ கத்திற்குப்பயனை விட ஆபத்தே அதிகம் ஏற்படு கிறது.

எனவே, பாடப் புத்தக அறிவோடு கூடவே அற நெறிப் பண்புகளையும் மாணவர்களின் மனதில் விதைக்க வேண்டும்.

வகுப்பறைகள் வெறும் அறிவை ஊட்டும் இடங் களாக மட்டுமல்லாமல், நல்லொழுக்கத்தைக் கற் றுத்தரும் களங்களாகவும் மாறவேண்டும். இதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும். விழுமி யங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கல்வி முறை யால்தான் வன்முறையற்ற, அமைதியான, மனித நேய மிக்கதொரு புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். அதை நோக்கியே நமது கல்விச் சீர்திருத் தங்கள் அமையவேண்டும்.

## ஆன்டிபயாட்டிக் (Anti Biotics) மருந்துகளை பொறுப்புடன் பயன்படுத்துவோம்

ஆன்டிபயாட்டிக் (AntiBiotics) மருந்துகளை பொறுப்புடன் பயன்படுத்துவோம் என்ற தலைப்பில் கருத்தரங்கு 27.05.2026 அன்று கலாசாலையில் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச உதவி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சீ.குணதாசன் அவர்களின் மேற்பார்வையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல்துறை மாணவர்கள் இணைந்து முன்னெடுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இடம்பெற்றது








# News in Brief - Months of April,May,June

**Assembly - 02.04.2026**

**The Lenten season**

The event was presided over by the college Principal, Shandramouleesan Laleesan. Rev. Dr. Ruban Mariyampillai attended the gathering as the special guest speaker and graced the occasion.

During the event, meaningful reflections were shared on the significance of Lent, spiritual values, and humanitarian virtues. The college lecturers, staff, and teacher - students participated in this solemn gathering.

**Assembly - 08.04.2026**

**World Health Day**

The event was presided over by the college Principal, Shandramouleesan Laleesan. Mr. Narkunaraja Niruban, Public Health Officer (PHO) at the Kilinochchi District Hospital, attended as the guest speaker and graced the occasion.

During the assembly, insightful awareness sessions on global health challenges, community well-being, and healthy lifestyles were shared. The event saw the active participation of college lecturers, staff, and teacher – students.

**15.04.2026**

**Final Examinations Conducted for Teachers' Training Colleges**

The final examinations for the 2023/2024 academic year of the Teachers' Training Colleges, conducted by the Department of Examinations, Sri Lanka, were held on May 11, 12, 13, 14, and 15.

**15.04.2026**

**Parabhava Tamil New Year**, the academic and administrative duties at the Kopay Teachers' College officially commenced on the morning of Wednesday.

To mark the auspicious occasion, a special pooja and blessing ceremony was held at the Yoga Lingeswarar Temple located within the college premises. Following the religious rituals, a traditional event took place at the Principal's office, where the Principal, Shandramouleesan Laleesan, offered *'Kai-Vishedam'* (auspicious traditional gifts/ blessings) to all the lecturers, staff, and teacher - students present.

**Assembly - 22.04.2026**

**Shakespeare Day" Honouring the Bard's Legacy**

The event was conducted under the leadership of the college Principal, S.Laleesan. Mrs. Sivashakthi Jeyarajah former Lecturer of English attended the event as a guest speaker and graced the occasion.

**Assembly - 29.04.2026**

**May Day & Welcomes New President of JNCoE**

The event to commemorate May Day, combined with a welcome ceremony for Arunachalam Guhan, the newly appointed President of the Jaffna National College of Education (NCoE), The event served a dual purpose: honoring the significance of International Workers' Day and fostering institutional collaboration by extending a warm reception to the newly appointed President.

**Assembly - 27.05.2026**

**An interfaith harmony assembly centered on Vesak Day**

The event was presided over by the college Principal, Shandramouleesan Laleesan. Mrs. Anusha Sajeevani Vimalswaminathan, a former lecturer of the college, attended as the guest speaker and graced the occasion.

The gathering highlighted spiritual unity, mutual respect among religions, and the core values of peace and compassion associated with Vesak Day.

**30.05.2026**

**An awareness seminar titled "Let's Use Antibiotics Responsibly"**

The public health awareness program was jointly conducted by the students of the Department of Chemistry, University of Jaffna, under the supervision of Dr. C. Gunadasan, the Assistant Medical Superintendent of the Kopay Divisional Hospital.

**Assembly 03.06.2026**

**World Environment Day**

The event was presided over by the college Principal, S.Laleesan. Renowned environmentalist Ponnuthurai Aingaranesan attended as the guest speaker and graced the occasion.

During the assembly, insightful discussions and awareness sessions on environmental conservation, ecosystem restoration, and sustainable living practices were shared.

**Assembly - 10.06.2026**

**World Palmyra Day**

The event was presided over by the college Principal, S.Laleesan. Mr. Krishnan Varatharajah, the General Manager of the Atchuvely Palmyra and Coconut Development Cooperative Society, attended as the guest speaker and graced the occasion.

During the assembly, insightful sessions were shared on the economic value of the palmyra palm, traditional livelihoods associated with it, and the importance of preserving this sustainable resource.

**Assembly - 17.06.2026**

**Central Bank Senior Manager Addresses**

Senior Manager of the Central Bank of Sri Lanka (Regional Office - North, Kilinochchi), attended the gathering as the guest speaker.

She delivered an insightful and detailed presentation on the core operations, functions, and economic role of the Central Bank of Sri Lanka.

**18.06.2026**

**Ponnuthurai Sargunanathan Assumed Duties as New Deputy Principal**

As a Class 1 Senior Officer of the Sri Lanka Teacher Educator Service (SLTES), the entire college community extends its warmest congratulations and best wishes to him on his new appointment.

**Thiruvasagam Festival—19.06.2026**

The event was presided over by the college Principal, S.Laleesan. Saiva Pulavar Dr. Erambamoorthy Anusandhan, a distinguished educator from Mahajana College, Tellippalai, attended as the chief guest and delivered an inspiring keynote address.

**Yoga Day - 24.06.2026**

The event was presided over by the college Principal, S.Laleesan. The gathering was graced by the presence of Mr. Manikkavasagam Rathinasothy, Martial Arts Instructor and Founder of the Gnanalaya Yoga Institute, alongside Miss Bhuvanendraraja Akshaya (a final-year medical student) and Mr. Mayuran (a dedicated social worker), who all attended as special guest speakers.

# தவக்காலத்தை சிறப்பிக்கும் வாராந்த ஒன்றுகூடல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தவக்காலத்தை சிறப்பிக்கும் வகையில் 02.04.2026 வியாழக்கிழமை இடம்பெற்றன.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் Rev.Dr. Ruban Mariyampillai கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆரம் பக் கல்வி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் முன்னிலைப்படுத்தினார்

தவக்காலம் பற்றிய ஆவணக் காணொளி யினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.


தவக்காலம் பற்றிய விசேட உரையினை விரிவுரையாளர் ஜெ.கொலின்ஸ்டன் ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையா ளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறை வுரை ஆற்றினார்

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.











# உலக சுகாதார தினத்தை சிறப்பிக்கும் ஒன்றுகூடல்
## பொது சுகாதார உத்தியோகத்தர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நற்குணராஜா நிருபன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக சுகாதாரத்தை சிறப்பிக்கும் வகையில் 08.04.2026 புதன்கிழமை ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெற்றன

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நற்குணராஜா நிருபன் (பொது சுகாதார உத்தியோகத்தர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை) அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் முன்னிலைப்படுத்தினார்

உலக சுகாதார தினம் 2026 அனைவருக்கும் ஆரோக்கியம் அறிவியல் மற்றும் கூட்டு உழைப்பு பற்றிய நவீன உலகில் நல வாழ்வு என்னும் காணொளியினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

அன்றாட வாழ்வில் சுகாதாரம் பற்றிய விசேட உரையினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தனுஷாயினி கவிராஜ் ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாள் இராஜேந்திரம் விமல் ஆற்றினார். அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.












# Weekly Wednesday Assembly Celebrating "Shakespeare Day" Mrs. Sivashakthi Jeyarajah former Lecturer of English attended the event as a guest speaker and graced the occasion

A special weekly assembly was held on Wednesday, 22.04.2026, at Kopay Teachers' College to commemorate Shakespeare Day.

The event was conducted under the leadership of the college Principal , Shanthiramouleesan Laleesan. Mrs. Sivashakthi Jeyarajah former Lecturer of English attended the event as a guest speaker and graced the occasion.

The program was hosted by second year English stream Teacher students Kausika Nirojan and Thanushayini A video presentation titled "The Bard of Avon" was prepared and presented by Kausika Nirojan.

A special speech on the literary work of Shakespeare was delivered by lecturer Ms. Sujeewa Arullingam.

A scene from Othello was presented in Solo Acting by Kausika Nirojan.

The Guest introduction was delivered by Lecturer Ms. Vasanthi Vaithilingam

A poem was recited by Thanushayini Kavirajah

The Principal, Shanthiramouleesan Laleesan, delivered the closing remarks.











# மே தினத்தை சிறப்பிக்கும் ஒன்றுகூடலம் புதிய பீடாதிபதிக்கான வரவேற்பும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி அருணாசலம் குகன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மே தினத்தை சிறப்பிக்கும் ஒன்றுகூடலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் புதிய பீடாதிபதி அருணா சலம் குகன் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் 29.04.2026 புதன்கிழமை காலை இடம்பெற்றன

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவன் தங்கராசா தர்சன் முன்னிலைப்படுத்தினார்

மே தினத்தில் ஆசிரியத்துவத்தைப் போற்றுவோம் என்னும் ஆவணக் காணொளி ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

மே தினம் பற்றிய விசேட உரையினை ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் ஆற்றினார். மே தினம் பற்றிய கவிதையினை விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி செல்வராணி தியாகராஜா ஆற்றினார்.

புதிய பீடாதிபதிக்கான அறிமுக உரையினை கலாசாலையின் பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் ஆற்றினார்.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்












# கலாசாலையில் வெசாக் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மதங்களின் சங்கம ஒன்றுகூடல்
## முன்னாள் விரிவுரையாளர், அனுஷா சஜீவனி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்

மே 30 வெசாக் தினத்தை மையப்படுத்தியதாக

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் திருமதி அனுஷா சஜீவனி விமல்சுவாமிநாதன் அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட வர்த்தகநெறி ஆசிரிய மாணவர் எம்.எஸ் ஹீபத்துல்லா முன்னிலைப்படுத்தினார்

வெசாக் தினம் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை வர்த்தகநெறி ஆசிரிய மாணவி ஆபிலூன் பர்ஷானா ஆற்றினார்.

மதங்களின் சங்கமம் எனும் தலைப்பில் வைகாசி விசாகம், வெசாக், ஹச் ஆகிய நிகழ்வுகள் பற்றிய தொகுப்பு காணொளி - ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தாயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

அதிதி அறிமுகவுரையை விரிவுரையார் சந்திரிகா தர்மரட்ணம் ஆற்றினார்.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.











# சுற்றுச் சூழல் தினத்தைச் சிறப்பிக்கும் வாராந்த ஒன்றுகூடல் சூழலியலாளர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக சுற்றுச்சூழலை சிறப்பிக்கும் வகையில் 03.06.2026 கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சூழலியலாளர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் முன்னிலைப்படுத்தினார்

உலக சுகாதார தினம் 2026 இயற்கையை நேசிப்போம், புவியைக் காப்போம் என்னும் காணொளியினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

அன்றாட வாழ்வில் சுற்றாடலை நேசிப்பது எவ்வாறு என்பது பற்றிய விசேட உரையினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தனுஷாயினி கவிராஜ் ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரன் ஆற்றினார்.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்











# பனை வளத்தைச் சிறப்பிக்கும் வாராந்த ஒன்றுகூடல்
### அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர்
## கிருஷ்ணன் வரதராஜா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக பனை தினத்தை சிறப்பிக்கும் வகையில் 10.06.2026 புதன்கிழமை ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெற்றன

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிருஷ்ணன் வரதராஜா (அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுத்தாபன பொது முகாமையாளர்) அவர்கள்

அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் முன்னிலைப்படுத்தினார்

பனை எனும் ஆதாரம் என்ற தலைப்பில் காணொளியினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

பனையும் தமிழ் இலக்கியங்களும் என்ற பொருளில் விசேடகல்விநெறி ஆசிரிய மாணவி செல்வகுமாரி தியாகராஜா உரை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பகீர்த்தனா சிவதர்ஷன் ஆற்றினார்.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்











# யோகா தினத்தைச் சிறப்பிக்கும் வாராந்த ஒன்றுகூடல் ஞானாலயா யோகா நிறுவுனர், தற்காப்புக்கலை ஆசிரியர் மாணிக்கவாசகம் இரத்தினசோதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக யோகா தினத்தை சிறப்பிக்கும் வகையில் 24.06.2026 புதன்கிழமை ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெற்றன

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஞானாலய யோகா நிறுவுநர் தற்காப்புக்கலை ஆசிரியர் மாணிக்கவாசகம் இரத்தினசோதி அவர்களுடன் இணைந்து புவனேந்திரராஜா அட்சயா (மருத்துவபீட இறுதி யாண்டு மாணவி)மற்றும் சமூகசேவையாளர் மயூரன் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவன் தங்கராசா தர்சன் முன்னிலைப்படுத்தினார்

யோகா - உங்கள் ஆரோக்கியம் உங்கள் கைகளில் என்னும் காணொளியினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

அன்றாட வாழ்வில் யோகா என்பது பற்றிய விசேட உரையினை ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஸ் ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை தமிழ்ப்பாடநெறி விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்

அதிதிகள் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்











## பராபவ புது வருடப்பிறப்பு 15.04.2026

பராபவ புது வருடப்பிறப்பை அடுத்து கலாசாலையில் நாள்வேலை 15.04.2026 புதன் காலை இடம்பெற்றது.

கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. தொடர்ந்து அதிபர் அலுவலகத்தில் அனைவருக்கும் கை விசேடம் வழங்கப்பட்டது.

கலாசாலை விடுமுறைக் காலம் ஆயினும் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.







## ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை

ஆசிரியர் கலாசாலைகளின் 2023/2024 கல்வி ஆண்டிற்காக இலங்கை பரீட்சை திணைக்களம் நடத்தும் இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் மே 11, 12, 13, 14, 15 திகதிகளில் நடைபெற்றன.

செயன்முறைப் பாடப் பரீட்சை மே 16 ஆம் திகதி நடைபெற்றது இப் பரீட்சைகள் யாவும் இலங்கை பரீட்சைத்திணைக்களத்தினால் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ்மொழி மூலம் நடாத்தப்பட்டது.




### கலாசாலையின் முன்னாள் உத்தியோகத்தர் உலகநாதன் காலமானார்

**கலாசாலையின் சேவை உதவியாளர் திரு தீபன் அவர்களின் தந்தை**

ஐயாத்துரை உலகநாதன் (முன்னாள் கல்வி சாரா உத்தியோகத்தர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) (தோற்றம் 17.12.1957) (வயது 69) அவர்கள் 01.04.2026 காலமானார்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய கலாசாலை குடும்பத்தின் சார்பில் பிரார்த்திக்கிறோம்



# The Impact of Shakespeare on Education

Shakespeare is regarded as one of the greatest writers in English literature. Even after more than four centuries, his works continue to influence education across the world. His plays, sonnets, and poems are widely studied in schools and universities because they enrich language, develop critical thinking, and teach valuable moral lessons. Through memorable characters and universal themes such as love, ambition, jealousy, and betrayal, Shakespeare helps students understand both literature and human nature. Moreover, his unique style of writing, especially in his sonnets and dramatic works, has greatly contributed to the study of poetry and drama. Therefore, Shakespeare's impact on education remains powerful and timeless. He didn't found schools or write textbooks—but his contribution to education is deep, lasting, and surprisingly practical. His works continue to shape how English, literature, and even life skills are taught.

**1. Enriching the English language**

Shakespeare expanded the vocabulary of English. He coined or popularized hundreds of words and phrases ("break the ice," "wild-goose chase," "heart of gold").



**Mrs. S Jeyarajah**
**Teacher of English**
**J/ Neervely Attiyar Hindu College**

This makes his works a rich resource for teaching vocabulary, idioms, and expressive language.

**2. Developing critical thinking**

His plays are full of complex characters like Hamlet, Macbeth, and Othello. Students must analyse motives, conflicts, and moral dilemmas.

This sharpens interpretation, reasoning, and discussion skills - core goals in education.

**3. Teaching universal human values**

Themes such as love, jealousy, ambition, power, betrayal, and forgiveness appear in his works. These help students reflect on human nature and ethics. For example, Macbeth explores ambition, while Othello examines jealousy and trust.

**4. Influencing curriculum worldwide**

Shakespeare is a central part of literature syllabi across many countries, including Sri Lanka. His texts are used to teach drama, poetry, and prose, forming a foundation for literary studies.

# The Impact of Shakespeare ………..

**5. Encouraging performance-based learning**

His plays are meant to be performed, not just read. Acting out scenes improves students' confidence, pronunciation, and engagement. It turns the class-room into an active learning space rather than a passive one.

**6. Cross-disciplinary learning**

Shakespeare connects literature with history (Elizabethan era), psychology (human behavior), and even politics (power and leadership). This makes learning more holistic.

**7. Cultural and global awareness**

His works are studied and performed worldwide, helping students understand different interpreta-tions, cultures, and perspectives.

**In short:**

Shakespeare's contribution to education lies not in formal systems, but in what and how we teach—language, critical thinking, moral reflection, and creative expression.



# If I Were Shakespeare Today

**If I were Shakespeare, alive today,**
**I'd Google what critics have to say.**
**No quill, just a phone so bright,**
**And wonder what it means at night.**

**Shall I compare thee to a summer's day?"**
**- Wait, let me check the weather app, okay?**
**If it's too hot, I'll change the line,**

**"Thou art more lovely and air-conditioned fine!"**
**Romeo wouldn't climb a wall at night**
**He'd just text Juliet, "Are you online? "**
**No balcony scene , no risky romance**
**Just blue ticks, typing and missed chance.**

**Hamlet would post with a thinking face,**
**"To be or not to be?" — hard to trace.**
**Macbeth would check his stars with care,**
**"Three witches said it—is it there?"**

**Othello wouldn't trust a handkerchief clue,**
**He'd scroll through WhatsApp chats to check what's true.**
**"Last seen at midnight? Who were you texting?"**
**Modern jealousy is even more vexing**

**But it's true**
**for the man.from Stratford**
**There's no one above him**
**His words live for ever and we all give him our love**

**By :- Mrs. S Jeyarajah - Teacher of English**

# The Bard's Unfading Ink……



**Thanushayini Kavirajah**

**Teacher Student of English Course (2024/2025)**

**Kopay Teachers' College**

In London's heart where wooden walls arose,
He sat with quill to capture human life;
From comedies that bloom just like the rose,
To tragedies that cut with sharper knife.
He found the rhythm in our common speech,
And taught the world that words have power to reach.

Young Romeo gazes up at Juliet's light,
A balcony where secret vows are sworn.
"What's in a name?" they ask into the night,
But stars declare that they were never born
To live as one; they fall to bitter grief,
A love so fast, a life so very brief.

Prince Hamlet holds a skull within his hand,
Debating if to live or cease to be.
The ghosts of fathers haunt the Danish land,
A mind caught in a tangled, deep decree.
To act or wait? The question echoes still,
Trapped by the weight of an uncertain will.

Upon the heath, the witches stir the pot,
While shadows dance around a kingly throne.
Macbeth will seek a crown that he knows not,
By blood and blade, a seed that he has sown.
The dagger floats—an image of his dread,
Until the guilt consumes him, spirit-dead.

In woods where fairies play and mortals stray,
A trickster Puck applies a floral charm.
Confused young lovers chase the light of day,
While magic keeps their hearts from true alarm.
A donkey's head, a dream within a dream,
Where nothing is as real as it may seem.

An aged King divides his crown in three,
But finds that flattery hides the lack of truth.
He wanders out where howling storms are free,
Stripped of his pride and all his wasted youth.
The thunder rolls against his aching soul,
As madness takes its heavy, final toll.

"Shall I compare thee to a summer's day?"
He asks the page to keep a love so bright,
Though winds of change may sweep the blooms away,
And short-lived seasons drift into the night.
Your beauty lives within this verse I pen,
To breathe and bloom for all the eyes of men.

He writes of seasons that must fade too fast,
Of golden locks that turn to silver gray;
He vows that love is built of things that last,
Defying time that tries to steal the day.
His ink preserves the beauty of the face,
Locked in a rhyme that holds its elegant grace.

And so the players exit from the stage,
But in his books, they live forevermore.
He turned the history of every age
Into the stories that we all adore.
For in his lines, we find ourselves revealed,
A truth in every word that stays unsealed.

# திருவாசக விழா.........

முதலாம் பக்க தொடர்ச்சி

அதனைத் தொடர்ந்து கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கலாசாலையின் விரிவுரையாளர்கள் பங்கேற்ற கருத்தரங்கு நடைபெற்றது.

திருவாசகம் ஒரு பன்முகப் பார்வை என்ற பொருள-ில இடம்பெற்ற இந்நிகழ்வில் கவிஞர் வேல் ந்தகுமார் - திருவாசகத்தில் மொழி என்ற பொருளிலும்

இந்துமன்றக் காப்பாளர் கு.பாலஷண்முகன் திருவா-சகத்தில் உணர்வு என்ற பொருளிலும் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் திருவாசகத்தில் சைவசித்தாந்தம் என்ற பொருளிலும் உரை ஆற்றினர். அதிபர் நிறை-வுரை ஆற்றினார்.

இதேவேளை கலாசாலையில் 16 வருடங்கள் கல்விப் பணி ஆற்றிய பிரதிஅதிபர் த.கோபால கிருஷ்ணன் இந்துமன்றக் காப்பாளராக இருந்து ஆற்றிய சேவைகளுக்காக கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கான கௌரவிப்பு உரையையும் கலாசா லையின் அதிபர் ச. லலீசன் ஆற்றினார்.

கலாசாலையின் பிரதிஅதிபர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரனுடைய நன்றி உரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.

இன்றைய நிகழ்வுகள் யாவும் டான் தொலைக்காட்சியின் ஓம் தொலைக்காட்சியின் அலைவரிசையில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.











